வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4086/அ1/2020, நாள் 26.04.2021

- - -

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வி - சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்-1 10.03.2020க்கு முன் தேர்ச்சி பெற்று முன் ஊதிய உயர்வு வழங்கப்படாத பணியாளர்களுக்கு முன் ஊதிய உயர்வு அனுமதிக்கக் கோரியது - கூடுதல் விவரங்கள் கோருவது - தொடர்பாக.

பார்வை : 1) அரசுக் கடிதம் எண்.6540/பக-4(2)/2021, நாள் 20.04.2021
2) சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.46150/அ4/21/2020, நாள் 24.03.2021 மற்றும் 23.04.2021

- - -

பார்வை 2ல் காணும் கடிதத்துடன் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் உள்ள பள்ளி மற்று அலுவலகங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்களுக்கு கணக்குத் தேர்வு பாகம்-1 10.03.2020க்கு முன் தேர்ச்சி பெற்றமைக்கு, முன்ஊதிய உயர்வு வழங்குவது குறித்து பார்வை 1ல் காணும் அரசுக் கடிதத்தில் கீழ்காணும் கூடுதல் விவரங்கள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தனியர்கள் கணக்குத் தேர்வு பாகம்-1 எழுதியதற்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகள், தேர்ச்சி பெற்றதற்கான அரசிதழ் அறிக்கையின் நகல்கள்(TNPSC Bulletin Copy) மற்றும் அப்பணியாளர்கள் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்-1ல் தேர்ச்சி பெற்ற விவரங்கள் பதியப்பட்ட பணிப்பதிவேட்டின் நகல்கள்

எனவே, மேற்காணும் விவரங்களை பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பிவைக்கும் பொருட்டு 27.04.2021 முற்பகல் 11.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி சார்ந்த அரசு/ நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள்/ மாவட்டக்கல்வி அலுவலர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1) அனைத்து அரசு/ நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
2) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள்
3) மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர்